செய்தி வெளியீடு எண்: 659 நாள்:29.09.2019

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (29.09.2019) சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, ஓமலூரில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாமினை துவக்கி வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாம் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெறும். பொதுமக்களிடத்தில் மனுக்கள் பெறப்பட்டு அதற்குத் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பை சட்டமன்றத்தில் வழங்கினோம். அந்த அறிவிப்பிற்கிணங்க சேலம் மாவட்டத்தில் முதற்கட்டமாக எடப்பாடியில் தொடங்கி ஏற்கனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, சங்ககிரி, வீரபாண்டி மற்றும் இன்றையதினம் மேட்டூர் ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் மாநகரப் பகுதிகளிலும் மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் நோக்கம், பொதுமக்கள் நேரடியாக அதிகாரிகளை சந்தித்து மனுக்களை வழங்குவதற்கு பதிலாக, முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் நேரடியாக மக்களை சந்தித்து, மனுக்களைப் பெறுவது தான். இத்திட்டத்தின் மூலம் நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. உங்கள் மனுக்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றப்பட்டு மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை

குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு மனுவின் மீதும் அதிகாரிகளால் தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணமும் மக்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும்.

பொதுமக்களின் மனுக்களில் பெரும்பாலும் முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை போன்றவையாகும். இதில் தகுதிவாய்ந்த மனுக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலிருந்து இதுவரை ஓமலூர் தொகுதி மக்களுக்கு பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். ஆனால், எதிர்க்கட்சியினர், பல கூட்டங்களிலும், பத்திரிகையாளர்களையும், ஊடகத்தினரையும் சந்திக்கின்ற பொழுதும் அதிமுக அரசு மக்களுக்கு எந்தத் திட்டங்களையும் செய்யவில்லை என்ற ஒரு தவறான, பொய்யான செய்தி பரப்பி வருகின்றனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில், அம்மாவின் அரசால் பொதுமக்களுக்கு செய்யப்பட்டுள்ள திட்டங்களின் விவரங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 86 இலட்சம் மானிய நிதியுதவியும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூபாய் 1 கோடியே 60 இலட்சத்து 47 ஆயிரம் பயிர் கடன் உதவியும், மகளிர் திட்டம் சார்பில் 23 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியும், 27 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவியும் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 18 இலட்சத்து 75 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்படுகிறது.

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் துணை வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 4 விவசாயிகளுக்கு ரூபாய் 14 இலட்சத்து 98 ஆயிரம் வேளாண் கருவிகளுக்கான மானிய நிதியுதவி வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறையின் சார்பில் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், 13 விவசாயிகளுக்கு நிதியுதவியும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ்,

3 விவசாயிகளுக்கு நிதியுதவியும் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், 10 விவசாயிகளுக்கு நிதியுதவியும், என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 11 இலட்சத்து 62 ஆயிரம் மதிப்பிலான மானிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத்துறையின் சார்பில் நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 22 விவசாயிகளுக்கு உழவு மானியம், பனை விதைகள் மற்றும் உயர் மதிப்பீட்டு மரங்கள் விநியோகமும், ஆத்மா திட்டத்தின் கீழ் 3 விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் கருவிகளும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 1 விவசாயிக்கு விசைத் தெளிப்பானும், என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 57 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் 424 பயனாளிகளுக்கு ரூபாய் 4 கோடியே 92 இலட்சத்து 39 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் ரூபாய் 270.64 கோடி மதிப்பீட்டில் 38,860 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 2,950 பயனாளிகளுக்கு ரூபாய் 30 கோடி மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், ரூபாய் 13.50 கோடி மதிப்பிலான 5,235 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறை சார்பில் ரூபாய் 88 இலட்சம் மதிப்பீட்டில் செம்மாண்டப்பட்டி மற்றும் பச்சனம்பட்டி ஆகிய 2 பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் சரக்கப்பிள்ளையூரில் உள்ள 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 55,825 பயனாளிகளுக்கு ரூபாய் 22.12 கோடி மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 4,081 பச்சிளம் குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 742 தாய்மார்களுக்கு ரூ.14.84 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து

பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இளம்பெண்களுக்கு 1,46,062 சானிடரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஓமலூர் அரசு மருத்துவமனையில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு ரூ.5.16 கோடி மதிப்பீட்டில் தரைதளத்தில் 24 படுக்கைகள் கொண்ட பிரசவ பகுதி அறுவை சிகிச்சை அரங்கம், முதல் தளத்தில் 20 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் 8 படுக்கைகள் கொண்ட முதலமைச்சரின் காப்பீட்டு திட்ட வார்டு அறைகள், இரண்டாம் தளத்தில் ஆண்களுக்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டும், பெண்களுக்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டும் என அனைத்து வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டு நவீன மருத்துவமனையான அரசு கொடுத்துள்ளது.

நெடுஞ்சாலைத் துறையில், 8 ஆண்டுகளில் ரூ.114.87 கோடி மதிப்பீட்டில் 321.04 கி.மீ. சாலைப்பணிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ரூ.80.89 கோடி மதிப்பீட்டில் 123.57 கி.மீ. சாலைப்பணிகள் அகலப்படுத்தி புதுப்பிக்கப்பட்டுள்ளன. தொளசம்பட்டி சாலையில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது. ஓமலூர் – சங்ககிரி சாலைலிருந்து முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டு வருகின்றது. காட்டைமேடு – எருமைக்காரன் வளைவுச் சாலையில் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டு வருகின்றது.

வேளாண்மைத் துறையின் மூலம் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் 65,159 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் 3,926 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசனம் மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள்

வழங்கப்பட்டுள்ளன. பருவமழை பொய்த்ததன் காரணமாக தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்த 1,097 விவசாயிகளுக்கு ரூ.43.72 இலட்சம் வறட்சி நிவாரண இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித்துறையில் மாநில திட்டத்தின் கீழ் ரூ.39.87 இலட்சம் மதிப்பீட்டில் 156 விவசாயிகளுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை பொறியியல் துறையில் ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் 2,027 விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பொருளீட்டுக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், 8 விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனுதவி ரூ.8.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 8 ஆண்டுகளில் 206 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூ.9 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசைத் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஓமலூர், காடையாம்பட்டி மற்றும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியங்களில் 49 பள்ளிகள், 100 அங்கன்வாடி மையங்கள், ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 25 புனரமைப்புத் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் ரூ.11.24 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.270.00 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து ஓமலூர், கருப்பூர் ஆகிய 2 பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு 2.87 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீரும், ஓமலூர் மற்றும் தாரமங்கலம் ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 121 குடிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 4.48 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

கூட்டுறவுத்துறையில் 94,831 விவசாய பெருமக்களுக்கு ரூ. 495.54 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளன. 4,750 விவசாய பெருமக்களுக்கு ரூ. 29.01 கோடி மத்திய

கால கடன் வழங்கப்பட்டுள்ளன. 8,55,972 விவசாய பெருமக்களுக்கு ரூ.2,787.55 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளன. 1,080 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4.60 கோடி மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த 2,398 மகளிருக்கு ரூ.61.57 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. 18,806 நபர்களுக்கு சுமார் ரூ.61.50 கோடி இதர கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 9,77,837 நபர்களுக்கு ரூ.3,439.71 கோடி பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறையில் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் 16,069 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள், விலையில்லா அசில் இன கோழிகள், கால்நடை பாதுகாப்பு திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறுபால்பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீடு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.1.57 கோடி மதிப்பீட்டில் 8 கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

பள்ளிகல்வித் துறையில் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.21.27 கோடி மதிப்பீட்டில் 19,264 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.5.08 கோடி மதிப்பீட்டில் 16,664 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், பெற்றோர்களை இழந்த 15 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.8.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இடை நிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 19,264 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.9.63 கோடி சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 84,729 மாணவ / மாணவியர்களுக்கு போக்குவரத்து பேருந்து பயணச்சலுகை அட்டை வழங்கப்பட்டுள்ளது. ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் மூன்று அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில்

ரூ.7.32 கோடி மதிப்பீட்டில் 5 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் கழிப்பறைகள் கட்டடமும், ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் காடையாம்பட்டி மாதிரிப் பள்ளிக்கு புதிய கட்டடமும், ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் காடையாம்பட்டியில் மாணவியர் விடுதி கட்டடமும் கட்டப்பட்டுள்ளன.

ஓமலூர் தொகுதியில் சேடப்பட்டி, வெண்ணானம்பட்டி, மூக்கனூர், குண்டுக்கல், பாகல் பட்டி, சக்கரைசெட்டிபட்டி, ஓலைப்பட்டி, பாலக்குட்டப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகிய 8 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இராமமூர்த்தி நகர், இராமிரெட்டிப்பட்டி, குண்டுக்கல், பாகல்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய 4 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எனவே, ஒரே பள்ளியிலேயே தங்களுடைய படிப்பை மாணாக்கர் தொடரக்கூடிய வாய்ப்பை அம்மாவின் அரசு உருவாக்கித் தந்துள்ளது. இதனால் கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

நபார்டு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.24.19 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள், சுற்றுச்சுவர், மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், 4,744 படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.16 கோடி திருமண நிதியுதவியுடன் 2,684 பவுன் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 2,600 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது.

பொதுப் பணித்துறை மூலமாக, ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத்துறை, பள்ளிக் கல்வித்துறை, வருவாய்த்துறை, பத்திரப் பதிவுத்துறை, புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்கு 23 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் வாயிலாக 2017–18 மற்றும் 2018–19–ஆம் ஆண்டுகளில் 813 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்க தேர்வு செய்யப்பட்டு, 702 உழைக்கும் மகளிருக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.1.75 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் மூலம் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் 180 குடியிருப்புகள் கட்டும்பணிகள் நடைபெற்று வருகின்றது.

மாவட்ட தொழில் மையம் மூலமாக 207 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான மானியம் ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஓமலூரிலிருந்து மேச்சேரி செல்லும் வழியில் இரயில்வே கடவின் குறுக்கே உயர்மட்டப் பாலம் வேண்டுமென்ற கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். அதேபோல, ஓமலூரிலிருந்து மேச்சேரி வரையிலான சாலை விரிவுபடுத்தப்படும். திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, கொங்கணாபுரம், தாரமங்கலம் வழியாக ஓமலூர் வரை செல்வதற்கு நான்கு வழிச்சாலைப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், அவர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஓமலூர், மேச்சேரி சாலையில் பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் உருவாக்கவிருக்கின்றோம். ஓமலூர் பகுதி பூக்கள் அதிகம் விளையக்கூடிய பகுதியாக இருப்பதினால், விவசாயிகள் விளைவிக்கக்கூடிய மலர்களை நல்ல விலையில் விற்பனை செய்வதற்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கப்படவுள்ளது.

விவசாயிகள், உப தொழிலாக கால்நடைகளையும் வளர்க்கிறார்கள். அதிக அளவிலே பால் தரக்கூடிய பசு மாடுகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக தலைவாசல் கூட்டு ரோடு அருகிலே சுமார் 1000 ஏக்கரில் ஆசியாவிலே மிகப் பெரிய கால்நடை பூங்கா உருவாக இருக்கிறது. அங்கு கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சி நிலையம் தொடங்கவிருக்கிறோம். அங்கு கலப்பின பசுக்களை

உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது, அவர்களின் பொருளாதார நிலை மேம்படும்.

என்னுடைய வெளிநாட்டுப் பயணத்தின்போது, அமெரிக்க நாட்டின், கலிபோர்னியா மாநிலத்தில், Buffalo என்ற இடத்திலே இருக்கின்ற கால்நடை பண்ணைக்கும் சென்றேன். அங்கு ஒரே இடத்தில் 3000 மாடுகளை வளர்க்கிறார்கள். சராசரியாக ஒவ்வொரு மாடும் சுமார் 70 லிட்டர் வரை பால் தருகிறது. அதேபோன்று தலைவாசலில், கால்நடை ஆராய்ச்சிப் பண்ணையில் அதிக பால் தரக்கூடிய நோய் எதிப்பு சக்தி கொண்ட கலப்பின பசுக்களை உருவாக்கி நமது விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அதேபோல அதிகமான எடை கொண்ட தரமான ஆடுகளை ஆராய்ச்சி நிலையிலிருந்து விவசாயிகளுக்கு தர இருக்கின்றோம். மீன் வளர்த்து தர உள்ளோம். இப்படிப்பட்ட திட்டங்களை விவசாயிகளின் நலனிற்காக உருவாக்கித் தரவிருக்கின்றோம்.

ஓமலூர் தக்காளி அதிகமாக பயிரிடப்படும் பகுதி என்பதால் அதிக உற்பத்தி மற்றும் விலை வீழ்ச்சி ஏற்படும் காலங்களில் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க தோட்டக்கலைத் துறையின் மூலம் தக்காளியை பதப்படுத்தி மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் இயந்திரம் பொருத்திய வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தக்காளி ஜுஸ் தயாரித்து, அதனை கெடாமல் சேமித்து பயன்படுத்தலாம்.

சேலம் மாவட்டத்தில் இராணுவ தளவாட உதிரி பாகங்கள் தொழிற்சாலை அமையவுள்ளதால் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும், சென்னை–சேலம் விமான சேவை காலை நேரங்களில் மட்டுமே உள்ளதை, மாலை நேரங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

இந்த அரசு மக்களின் அரசு. விவசாயிகளின் நலன் காக்கும் அரசு. அனைத்து தரப்பட்ட மக்களின் நலனுக்காக என்றென்றும் தொடர்ந்து பாடுபடும் என்பதை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**